வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632

# ஈழநாடு

Eelanadu

விலை ரூ. 30/=




Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 21.04.2026 செவ்வாய்க்கிழமை இதழ் : 104 பக்கங்கள் : 08

# மாகாண சபைத் தேர்தலை தள்ளிப்போடுகின்றது அரசு!

## மனோ கணேசன் கடும் அதிருப்தி



**கொழும்பு, ஏப். 21**

**எல்லை நிர்ணய ஆணைக்குழு மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் நேற்று குழுவுக்கு முன்னிலையாகவிருந்த நிலையில் குழு கூட்டம் திகதி அறிவிக்காமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இது மாகாண சபைத் தேர்தல் தொடர்பான அரசாங்கத்தின் அசமந்த போக்கியை வெளிப்படுத்துகிறது என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், விசேட செயற்குழுவின் பிரதிநிதியுமான மனோ கணேசன் கடும் அதிருத்தி வெளிப்படுத்தினார்.**

மாகாணசபை தேர்தல் முறைமை குறித்து ஆராய்ந்து விதப்புரைகள் மற்றும் யோசனைகளை முன்வைக்கும் பாராளுமன்ற விசேட செயற்குழு குறித்து வினவியபோது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

மாகாணசபைத் தேர்தலை விரைவாக நடத்தும் பொருட்டு காணப்படும் சட்ட சிக்கலுக்கு தீர்வு காணும் பொருட்டு பாராளுமன்ற விசேட செயற்குழு நியமிக்கப்பட்டது.

பழைய விகிதாசாரத் தேர்தல் முறைமையின் கீழ் மாகாணசபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்று குழுவில் வலியுறுத்தியுள்ளோம்.

கடந்த வாரம் குழு கூடிய 07

## இந்த வருடம் மீண்டும் ஆட்சியை பிடிப்போம்!

### மகிந்த ராஜபக்ஷ சூளுரை

கொழும்பு, ஏப். 21

இந்த வருடம் ஆட்சியை பிடிப்பதற்கான பாரிய திட்டம் இருப்பதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லயில் உள்ள பொதுஜன பெரமுனவின் தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற புத்தாண்டு நிகழ்வுகளில் கலந்து கொண்டதன் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் தற்போதைய பொருளாதாரச் சூழல் மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு 07

## பிள்ளையான் மீண்டும் சிறைச்சாலைக்கு

கொழும்பு, ஏப். 21

சிறைச்சாலைகள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த, பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவனேசத்துரை சந்திரகாந்தன், மீண்டும் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். 07

## பெந்தோட்டை கடலில் நீராடிய யாழ். மாணவர் மூழ்கி மரணம்!

கொழும்பு, ஏப். 21

பெந்தோட்டை கடலில் நீராடச் சென்ற யாழ்ப்பாணம், சுன்னாகம் பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞர் மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தில் மூன்றாம் ஆண்டில் கல்வி கற்று வந்த மாணவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் நேற்று முன் தினம் மதியம் மேலும் சில 07

## அதிகளவு கட்டணத்திலேயே பெற்றோல், டீசல் கொள்வனவு

### சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு



கொழும்பு, ஏப். 21

தற்போதைய அரசாங்கத்தின் கீழ் எரிபொருள் இறக்குமதியின்போது பெற்றோல், டீசல் மற்றும் விமான எரிபொருள் ஆகியவற்றுக்கு வழக்கத்திற்கு மாறாக மிக அதிக பிரீமியம் கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளதாக ஐக்கிய குடியரசு முன்னணி யின் தலைவர் 07

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் 7ஆம் ஆண்டு நினைவு இன்று

கொழும்பு, ஏப். 21

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலின் 07 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் இன்று நடைபெறவுள்ளன.

இதனை முன்னிட்டு, கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தை அண்மித்த வீதிகளில் விசேட போக்குவரத்துத் திட்டம் 07

## பொருளாதார ஆய்வறிக்கை ஜனாதிபதியிடம் கையளிப்பு!

கொழும்பு, ஏப். 21

இலங்கை மத்திய வங்கியின் மிக முக்கியமான வெளியீடுகளான 'வருடாந்த பொருளாதார ஆய்வு 2025' மற்றும் 'நிதி மற்றும் செயற்பாட்டு அறிக்கை 2025' ஆகிய இரு அறிக்கைகளும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் நேற்று திங்கட்கிழமை உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டன. 07

## வலுசக்தி அமைச்சராக அநுர கருணாதிலக்க!

கொழும்பு, ஏப். 21


ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவினால் வலுசக்தி அமைச்சராக அநுர கருணாதிலக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

அதன்படி, அநுர கருணாதிலக்க நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி முன்னிலையில் வலுசக்தி அமைச்சராக சத்தியப் 07



## இலங்கை தமிழர்கள் நலனில் உறுதியாக உள்ளது இந்தியா!

### நுவரெலியாவில் இந்தியத் துணை ஜனாதிபதி



கொழும்பு, ஏப். 21

இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் நலன் மற்றும் மேம்பாட்டுக்காக இந்திய அரசாங்கமும் இந்திய மக்களும் ஆழ்ந்த அர்ப்பணிப்புடன் இருப்பதாக இந்திஅய துணை ஜனாதிபதி சி.பி. இராதாகிருஷ்ணன் குறிப்பிட்டார்.

இலங்கைக்கு 07

## யாழில்.160 பரப்புக் காணி மோசடி; புத்தளம் வாசி பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், ஏப். 21

யாழ்ப்பாணத்தில் சுமார் 160 பரப்பு காணியை மோசடி செய்த குற்றச்செயலுடன் தொடர்புடைய நபருக்கு , உதவிய குற்றச்சாட்டில் சுமார் ஒரு வருட கால பகுதிக்கு பின்னர் புத்தளம் வாசியை பொலிஸார் கைது செய்துள்ளனர்

வண்ணார்பண்ணை பகுதியில் 160 பரப்பு காணியை மோசடியான உறுதி மூலம் காணி மோசடியில் ஈடுபட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் 07

## மதுவரித் திணைக்களத்துக்கு ரூபா 70 பில்லியன் வருமானம்!

### முதல் காலாண்டில் வரலாற்று சாதனை

கொழும்பு, ஏப். 21

2026 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் முன்னெப்போதும் இல்லாத வகையில் சாதனை அளவிலான வருமானத்தை ஈட்டியுள்ளதாக மதுவரித் திணைக்களம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

2026 மார்ச் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த முதல் மூன்று மாத காலப்பகுதியில், மதுவரி வருமானம் 70.4 பில்லியன் ரூபாயாகப் பதிவாகியுள் ளது. இக்காலப்பகுதிக்காக நிர்ணயிக்கப்பட்டிருந்த 07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிகாட்டுவானின் இரண்டாம் கட்ட புனரமைப்புப் பணி நாளை ஆரம்பம்

### அமைச்சர் பிமல் ரத்நாயக்க பங்கேற்கிறார்

யாழ்ப்பாணம், ஏப். 21

குறிகட்டுவான் இறங்குதுறையின் இரண்டாம் கட்ட புனரமைப்புப் பணிகளுக்கான ஆரம்ப நிகழ்வு நாளை காலை 09 மணிக்கு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் பங்கேற்புடன் நடைபெறவுள்ளது.

இந்த புனரமைப்பிற்காக 984.73 மில்லியன் ரூபா செலவிடப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன் இவ் இறங்குதுறை புதிய தோற்றத்துடன் பல தசாப்தங்களின் பின் மீள நிர்மாணிக்கப்பட உள்ளது.

கடந்த ஒக்ரோபர் மாதம் 05ஆம் திகதி இறங்குதுறைக்கான முதலாம் கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, துரித கதியில் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் , தற்போது இரண்டாம் கட்டப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன. (அ)

# தனியார் பயணிகள் பஸ்ஸில் மண்ணெண்ணெய் கடத்தல்!

### நடத்துநர் பொலிஸாரால் கைது

கொழும்பு, ஏப். 21

வெள்ளவாய பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது, கொழும்பிலிருந்து மொனராகலை நோக்கி பயணிகளை ஏற்றிச் சென்ற தனியார் பஸ் ஒன்றிலிருந்து 100 லீற்றர் மண்ணெண்ணெய் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

பஸ்ஸில் மண்ணெண்ணெய் கடத்தப்படுவதாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே இந்தச் சோதனை நடத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பஸ் நடத்துனர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர் வெள்ளவாய நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# நவீன தாழ்தள பஸ் சேவைகள் இன்று மாகும்புரவில் ஆரம்பம்!

கொழும்பு, ஏப். 21

மாகும்புர பல்வகை போக்குவரத்து மத்திய நிலையத்திலிருந்து இன்று முதல் விசேட தாழ்தள பஸ் சேவைகளை ஒரு முன்னோடித் திட்டமாக ஆரம்பிக்க போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு தீர்மானித்துள்ளது.

போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்கத் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ள இந்த வேலைத்திட்டமானது, "கிளீன் சிறீலங்கா" திட்டத்தின் கீழ் 430.7 மில்லியன் ரூபாய் செலவில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

அனைவருக்கும் சமமான வாய்ப்பு மற்றும் மனித கண்ணியத்தை உறுதிப்படுத்தும் நோக்கில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இத்திட்டத்தின் முதற் கட்டமாக, 10 நவீன குளிரூட்டப்பட்ட தாழ்தள பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

இந்த பஸ்கள் குறிப்பாக சக்கர நாற்காலிகளைப் பயன்படுத்துவோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் எவ்வித சிரமமுமின்றி இலகுவாக ஏறி இறங்கும் வகையில் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

33 இருக்கை வசதிகளைக் கொண்ட இந்த பஸ்களில் ஒரே நேரத்தில் 80 பயணிகள் வரை பயணிக்க முடியும் என்பதுடன், பயணிகளின் பாதுகாப்பிற்கான விசேட அம்சங்களும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்தச் சேவையானது மாகும்புரவிலிருந்து கோட்டை வரையிலும், மாகும்புரவிலிருந்து கடவத்தை வரையிலும் முன்னெடுக்கப்படவுள்ளதுடன், காலை மற்றும் மாலை வேளைகளில் நெரிசல் மிகுந்த நேரங்களில் ஒவ்வொரு 40 நிமிடங்களுக்கு ஒருமுறை பஸ்கள் இயக்கப்படவுள்ளன. (அ)

# இலங்கை பெண்களின் பாதுகாப்புக்கு சட்டங்களை வலுப்படுத்த நடவடிக்கை

கொழும்பு, ஏப். 21

நாட்டில் அண்மைக் காலமாக பெண்களுக்கெதிரான வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்து வரும் நிலையில், அவற்றைத் தடுப்பதற்கான சட்டங்கள் மற்றும் கொள்கைகளை வலுப்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாக மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த மகளிர் மற்றும் சிறுவர் விவகார பிரதி அமைச்சர் நாமல் சுதர்சன, பெண்களை வலுப்படுத்துவதற்காக பெண்களுக்கான தேசிய ஆணைக்குழுவின் ஊடாகக் கொள்கை ரீதியான மாற்றங்களைச் செய்வதற்கு அமைச்சு தற்போது கவனம் செலுத்தி வருவதாகக் குறிப்பிட்டார்.

பெண்களைப் பாதுகாப்பதற்காக தற்போது நடைமுறையிலுள்ள சட்டங்கள் மற்றும் கொள்கைகளில் சில குறைபாடுகள் காணப்படுவதாகவும், அவற்றை அவசரமாகச் சரி செய்யவேண்டியது அவசியம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

2005 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்காக நீதியமைச்சுடன் இணைந்து மகளிர் விவகார அமைச்சு பணியாற்றி வருகின்றது.

நீதியமைச்சு தனது தொழில்நுட்ப நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி சட்டத்தை மீளாய்வு செய்து வருவதுடன், அடையாளம் காணப்பட்ட பலவீனங்கள் மற்றும் சட்ட ஓட்டைகளை அடைப்பதற்கான பரிந்துரைகளை மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு வழங்கி வருகின்றது. (அ)

# புத்தாண்டு விடுமுறை காலத்தில் விபத்து, நீரில் மூழ்கி 70 பேர் பலி!

கொழும்பு, ஏப். 21

கடந்த எட்டு நாள்களைக் கொண்ட சித்திரைப் புத்தாண்டு விடுமுறை காலப்பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்துக்கள் மற்றும் நீரில் மூழ்கிய சம்பவங்களில் சிக்கி இதுவரையில் 70 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

பொலிஸார் வெளியிட்டுள்ள தரவுகளின்படி, கடந்த ஏப்ரல் 10ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரையான காலப் பகுதியில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற 42 பாரிய வீதி விபத்துக்களில் 44 பேர் உயிரிழந்துள்ளனர்.

அதேவேளை, ஏப்ரல் 12 முதல் 18 வரையான ஆறு நாட்களில் மாத்திரம் நீர்நிலைகளில் நீராடச் சென்ற 26 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஒருவர் மட்டும் கொண்ட தனிக்குடும்பம் முல்லைத்தீவு மாவட்டத்திலேயே அதிகம்!

கொழும்பு, ஏப். 21

நாட்டில் ஒருவரை மாத்திரம் கொண்ட தனிக்குடும்பங்கள் அதிகளவில் முல்லைத்தீவு மாவட்டத்திலேயே காணப்படுவதாகவும் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகளவான பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் காணப்படுவதாகவும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2024 ஆம் ஆண்டுக்கான இலங்கை சனத்தொகை மற்றும் வீடமைப்புப் புள்ளிவிவரத் தரவுகளின் அடிப்படையில், நாட்டின் குடும்பக் கட்டமைப்பு, குடும்பத் தலைவர்களின் பண்புகள், கல்வித் தகைமை மற்றும் சமூகப் பொருளாதாரக் காரணிகள் குறித்த தகவல்களிலேயே இவ்விடயம் வெளியாகியுள்ளது.

இலங்கையின் மொத்தக் குடும்பங்களின் எண்ணிக்கை 6,111,315 ஆகும்.

இதில் 58.9 சதவீதத்துடன் (3,598,976 குடும்பங்கள்) கருக் குடும் பங்கள் முதலிடத்தில் உள் ளன. கருக் குடும்பங்கள் என்பது பெற்றோர்கள் (தாய், தந்தை) மற்றும் அவர்களின் திருமணம் செய்யாத பிள்ளைகளை மாத்திரம் கொண்ட குடும்பம் அமைப்பாகும்.

அதனைத் தொடர்ந்து விரிவுபடுத்தப்பட்ட குடும்பங்கள் 29.7 சதவீதமாக காணப்படுகிறது.

இது பெற்றோர்கள் மற்றும் பிள்ளைகளுடன் மேலதிகமாக நெருங்கிய உறவினர்களையும் (தாய் வழி/தந்தை வழி உறவினர்கள், பேரப்பிள்ளைகள் போன்றவை) உள்ளடக்கிய குடும்ப அமைப்பாகும்.

தனிநபர் குடும்பங்கள் 10.5 வீதமாகவும் மிகவும் குறைந்த அளவாக கூட்டு குடும்பங்கள் 0.9 வீதம் மாத் திரமே பதிவாகியுள்ளன.

அனைத்துத் துறைகளிலும் மாவட்டங்களிலும் 50 வீதத்திற்கும் அதிகமான குடும்பங்கள் கருக் குடும்பங்களாகவே உள்ளன.

மாவட்ட ரீதியாகப் பார்க்கும்போது, கம்பஹா மாவட்டம் அதிகளவான குடும்பங்களைக் கொண்டுள்ளதுடன், கொழும்பு மாவட்டம் இரண்டாவது இடத்தில் உள்ளது.

குறைந்த எண்ணிக்கையிலான குடும்பங்கள் மன்னார் மாவட்டத்தில் பதிவாகியுள்ளன.

தனிநபர் குடும்பங்கள் அதிகளவில் முல்லைத்தீவு மாவட்டத்திலும் (12.4 வீதம்), கருக் குடும்பங்கள் அதிகளவில் திருகோண மலை மாவட்டத்திலும் (68.1 வீதம்), விரிவுபடுத்தப் பட்ட குடும்பங்கள் அதிகளவில் கேகாலை மாவட்டத்தி லும் (34.1 வீதம்) காணப்படுகின்றன.

குடும்பத் தலைவர்களின் இனத்துவப் பரவலை ஆராயும் போது, சிங்கள இனத்தைச் சேர்ந்த குடும்பத் தலைவர்கள் 58.4 வீத கருக் குடும்பங்களைக் கொண்டுள்ளனர்.

இலங்கைத் தமிழர்களிடையே இது 59.9 வீதமாகவும், இலங்கை முஸ்லிம்களிடையே 62.9 வீதமாகவும் காணப்படுகிறது.

இந்திய வம்சாவளித் தமிழர்களிடையே விரிவுபடுத்தப்பட்ட குடும்பங்களின் வீதம் ஏனைய இனத்தவர்களை விட அதிகமாக (35.2 வீதம்) பதிவாகியுள்ளது.

"ஏனைய" இனக்குழுமங்கவில் தனிநபர் குடும்பங்க ளின் சதவீதம் (12.5 வீதம்) ஒப்பீட்டளவில் அதிகமாக உள்ளது. (அ)

# சுயாதீன வழக்கறிஞர் அலுவலகத்தை நிறுவும் பணிகளுக்கு கூடுதல் காலம்!

### அமைச்சர் ஹர்ஸன நாணயக்கார கூறுகிறார்

கொழும்பு, ஏப். 21

இலங்கையில் சுயாதீன அரச வழக்கறிஞர் அலுவலகம் ஒன்றை நிறுவுவதற்கான பணிகள் எதிர்பார்த்ததை விட சற்று கூடுதல் காலத்தை எடுத்துக்கொள்வதாக நீதி மற்றும் தேசிய ஒருகிணைப்பு அமைச்சர் ஹர்ஸன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

எனினும், அதற்கான முதற் கட்ட நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

உயர்நீதிமன்ற நீதியரசர் யசந்த கோத்தாகொட தலைமையில் அமையவுள்ள இந்த அலுவலகம் தொடர்பான பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், திட்டமிட்டதை விட அதிக காலம் எடுத்தாலும் நிச்சயம் இது நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக, 2019 ஏப்ரல் 21 அன்று இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பான வழக்குகளைக் கையாள்வதற்கு இவ்வாறானதொரு சுயாதீன அமைப்பு அவசியம் என கத்தோலிக்க திருச்சபை தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தது. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Eelanadu
21.04.2026 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 07

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இந்திய துணை ஜனாதிபதியுடன் தமிழ்க் கட்சிகளின் சந்திப்பு

இந்திய துணை ஜனாதிபதி சி.பி. இராதாகிருஷ்ணன் தனது இரு நாள் இலங்கை விஜயத்தின் போது அரசாங்கத் தலைவர்களுடனும் வடக்கு, கிழக்கு மற்றும் மலையக தமிழ் கட்சிகளின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தினார். இந்திய துணை ஜனாதிபதி ஒருவர் இலங்கை அரசாங்கத்துடன் இரு தரப்பு பேச்சுவார்த்தைகளை நடத்தியிருப்பதும் தமிழ்க் கட்சிகளுடன் இனப்பிரச்னை குறித்து ஆராய்ந்ததும் இதுவே முதற் தடவை.

ஜனாதிபதி அநுர குமார திசநாயக்கவுடன் இராத கிருஷ்ணன் நடத்திய பேச்சுவார்த்தையில் பல்வேறு துறைகளிலும் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்தும் குறிப்பாக திருகோணமலையில் " சக்திவள மையத்தை " அமைப்பதற்கான திட்டம் உட்பட ஏனைய திட்டங்களை காலதாமதமின்றி முன்னெடுக்க வேண்டிய அவசியம் குறித்து ஆராயப்பட்டதாக கூறப்படுகிறது.

அவருடனான சந்திப்புக்களின்போது வடக்கு, கிழக்கு மற்றும் மலையக தமிழ் கட்சிகளின் தலைவர்கள் வழமை போன்று தங்களது சமூகங்களின் பிரச்னைகளுக்கு தீர்வுகளைக் காண இந்திய உதவிக்கு வேண்டுகோள் விடுத்தனர்.

"சமாதான உடன்படிக்கை ஒருபோதுமே முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. அரசியலமைப்புக்கான 13 வது திருத்தம் கூட முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று நாம் அவரிடம் கூறினோம். இரு நாடுகளிலும் எந்த அரசாங்கம் பதவியில் இருந்தாலும் உடன்படிக்கையை நிறைவேற்ற வேண்டும். மீளப்பெறமுடியாத அதிகாரங்களுடன் கூடிய கூட்டாட்சி (சமஷ்டி ) முறைமையின் அடிப்படையிலான ஏற்பாட்டின் மூலமாகவே அதைச் செய்ய வேண்டும் என்றும் அவரிடம் கூறினோம்" என்று தமிழரசு கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் இராதாகிருஷ்ணனுடனான சந்திப்புக்கு பிறகு கூறினார்.

உடன்படிக்கையை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற புதுடில்லியின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை என்றும் மாகாணசபை தேர்தல்களை விரைவாக நடத்துவது குறித்து ஜனாதிபதி திசநாயக்கவின் கவனத்துக்கு கொண்டு வந்தபோது அவர் சாதகமான சமிக்ஞையை வெளிப்படுத்தினார் என்றும் இராதாகிருஷ்ணன் தமிழ் கட்சிகளின் தலைவர்களிடம் கூறியதாக செய்திகள் வெளியாகின.

தமிழ் தேசிய பேரவையின் நிலைப்பாட்டை விளக்கும் கடிதம் ஒன்றை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் கையளித்தார். துணை ஜனாதிபதி சட்டத்துறை சாராதவர் என்பதனாலோ என்னவோ சமஷ்டி முறை, ஒற்றையாட்சி முறை மற்றும் ஏக்கியராஜ்ய குறித்து அவருக்கு பாடம் எடுப்பதைப் போன்று கடிதத்தின் உள்ளடக்கம் அமைந்திருந்தது.

இந்தியப் பங்களிப்பு இன்றி இலங்கை பொருளாதார வளர்ச்சியை அடைய முடியாது என்பதால் இலங்கை அரசு மீது கணிசமான நெருக்குதலைப் பிரயோகித்து தமிழர்கள் விரும்பும் தீர்வை இந்தியாவினால் சாத்தியமாக்க முடியும் என்பது பேரவையின் நம்பிக்கையாக இருக்கிறது.

ஆக மொத்தத்தில், 13 ஆவது திருத்தத்தைக் கூட நடைமுறைப்படுத்த இலங்கை அரசாங்கங்களை சுமார் 40 வருடங்களாக வழிக்குக் கொண்டுவர இயலாமல் இருக்கும் இந்தியாவிடம் ( இராதாகிருஷ்ணன் ஊடாக) சமஷ்டி முறையின் அடிப்படையிலான தீர்வைப் பெற்றுத் தருமாறு தமிழ்க் கட்சிகள் மீண்டும் ஒரு தடவை வேண்டுதல் செய்திருக்கின்றன.

சமஷ்டி அடிப்படையிலான தீர்வு என்பது ஒரு நாட்டில் இன்னொரு நாட்டின் நெருக்குதலின் மூலமாக நிறுவப்படுவதல்ல என்பதையும் மாகாண சபைகளைக் காப்பாற்றி, மத்திய அரசாங்கத்தினால் பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீட்டெடுப்பதற்கும் மேலும் அதிகாரங்களைப் பெறுவதற்கும் போராடுவதே சமஷ்டியை நோக்கிய நடைமுறைச் சாத்தியமான பாதை என்பதை எமது தமிழ்த் தலைவர்கள் எப்போது புரிந்து கொள்வார்களோ? இந்தியாவைக் கோருவதைத் தவிர சமஷ்டித் தீர்வைக் காண இவர்களிடம் உள்ள வழிவரைபடம் தான் என்ன?

### ஊழல் மோசடி வழக்கில் கைதான

# முன்னாள் அமைச்சர் கமகேவுக்கு கடும் நிபந்தனைகளுடன் பிணை

கொழும்பு, ஏப். 21

ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினரால் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் பியசேன கமகேவை பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் அதிகாரிகள் மற்றும் சந்தேகநபர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகளின் சமர்ப்பணங்களை ஆராய்ந்த பின்னர், கொழும்பு மேலதிக நீதிவான் அசங்க எஸ். போதரகம இந்த உத்தரவை பிறப்பித்தார்.

2015ஆம் ஆண்டு சந்தேகநபர் திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சராக பதவி வகித்தபோது, உரிய சட்ட நடைமுறைகளை மீறி காலி மாவட்டத்தை சேர்ந்த 134 பேரை தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தில் சிற்றுழியர்களாக நியமித்ததாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

காலி மாவட்டத்தில் உள்ள தனது அரசியல் ஆதரவாளர்களுக்கே இவ்வாறு நியமனங்கள் வழங்கப்பட்டமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ஒழுக்காற்று காரணங்களுக்காக இடமாற்றம் செய்யப்பட்டிருந்த யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரி பணிப்பாளர் என். யோகராஜாவின் இடமாற்றத்தை இரத்து செய்யுமாறு முன்னாள் அமைச்சர் அழுத்தம் கொடுத்துள்ளார்.

இதன் மூலம் அவர் தனது அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி ஊழல் புரிந்ததாக அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த நீதிவான், முன்னாள் அமைச்சரை தலா 20 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்க உத்தரவிட்டார்.

அத்துடன் சந்தேகநபருக்கு வெளிநாட்டு பயணத்தடை விதிக்கப்பட்டது.

சாட்சியாளர்களுக்கு அழுத்தம் கொடுப்பதை தவிர்க்குமாறு கடுமையாக எச்சரிக்கப்பட்டது.

இந்த வழக்கு மீண்டும் ஒகஸ்ட் 21ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் படவுள்ளதுடன், அன்றைய தினம் விசாரணைகளின் முன்னேற்றத்தை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு நீதிவான் உத்தரவிட்டார். (எ)

# ரூ. 3 கோடிக்கும் அதிக பெறுமதியுடைய சிகரெட்களுடன் சீனப் பிரஜை கைது!

கொழும்பு, ஏப். 21

சட்டவிரோதமான முறையில் சுமார் 03 கோடி ரூபாய் பெறுமதியுடைய சீனத் தயாரிப்பு சிகரெட்களை கொண்டுவந்த சீனப் பிரஜை ஒருவர் நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

35 வயதுடைய இவர் இலங்கைக்கு வருகை தரும் மூன்றாவது சந்தர்ப்பம் இதுவெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 12. 55 மணியளவில் தாய்லாந்தின் பாங்கொக் நகரில் இருந்து தாய் ஏர்வேஸ் விமானம் மூலம் இவர் கட்டுநாயக்கவை வந்தடைந்தார்.

இதன்போது, அவரது 13 பயணப் பொதிகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 229,800 சீனத் தயாரிப்பு சிகரெட்கள் (1,149 கார்ட்டூன்கள்) கைப்பற்றப்பட்டன. அவற்றின் சந்தைப் பெறுமதி சுமார் 03 கோடியே 44 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை தடுத்து வைத்து விமான நிலைய சுங்க அதிகாரிகள், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(எ)

# விசேட சுற்றிவளைப்பில் 608 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, ஏப். 21

பொலிஸ் மா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய, நாடளாவிய ரீதியில் ஞாயிற்றுக் கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது, 608 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

அத்துடன் 26,600 பேர் பரிசோதிக்கப்பட்டதுடன், 26 பேர் குற்றங்களுடன் தொடர்புடைய மற்றும் நேரடியாக அடையாளம் காணப்பட்டனர்.

இதேநேரம், கைது செய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 164 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 98 பேரும் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, மதுபோதையில் வாகனம் செலுத்திய 114 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 44 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன், பிற போக்குவரத்து குற்றங்களுக்காக 3,419 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# பெண்கள் இருவரை தாக்கிய விமானப்படை சிப்பாய் கைது

அநுராதபுரம், ஏப். 21

காணியொன்றுக்குள் அத்துமீறி நுழைந்து பெண்கள் இருவரை தாக்கி காயப்படுத்திய சம்பவத்துடன் தொடர்புடைய விமானப்படை சிப்பாய் ஒருவரை மிஹிந்தலை பொலிஸார் கைது செய்தனர்.

மிஹிந்தலை பொலிஸ் பிரிவின் பனாவெவ, சீப்புக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை நடத்திவரும் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் நிலையத்துக்கு கிடைத்த தகவலுக்கு அமைய சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

(எ)

# பரமாகந்த லுனுவெவ சரணாலயத்தில் கட்டுத்துவக்கு வெடித்து ஒருவர் பலி!

கொழும்பு,ஏப். 21

புத்தளம் - ஆனமடுவ பரமாகந்த லுனுவெவ சரணாலயத்தில் கட்டுத்துவக்கு துப்பாக்கியில் சிக்கி ஒரு பிள்ளையின் தந்தை துரதிர்ஷ்டவசமாக உயிரிழந்துள்ளதாக ஆனமடுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் பரமாகந்த முகவரியில் வசிக்கும் 40 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையான தினேஷ் என கூறப்படுகிறது.

சம்பந்தப்பட்ட நபர் லுனுவெவவிற்கு சென்று மீன் பிடித்து விட்டு திரும்பும் போது, இரவில் ஏரி சரணாலயத்தின் ஊடாக பயணித்துக் கொண்டிருந்த வேளை, அப்பகுதியில் வனவிலங்குகளை இலக்கு வைத்து கட்டியிருந்த கட்டுத்துவக்கில் சிக்கி, அந்த இடத்திலேயே பலத்த காயங்களுக்குள்ளாகி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சரணாலயத்திற்குள் புதர் வழியாக குனிந்து சென்று கொண்டிருந்தபோது, கட்டுத்துவக்கு வெடித்துள்ளதாகவும், வயிற்றை ஊடுருவிச் சென்று துப்பாக்கி குண்டு பாய்ந்துள்ளதாகவும் பொலிஸார் மேற்கொண்ட ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஏப்ரல் - 21 செவ்வாய்கிழமை
விசுவாவசு வருடம் - சித்திரை 08
நல்ல நேரம் : 07.31 - 9.00
ராகு காலம் : 03.00 - 4.30
திதி : பஞ்சமி




**மேடம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். நண்பர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். புதிதாக ஆடை ஆபரணம் வாங்குவீர்கள்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாக பயன்படுத்தாமல் விட்டு விட்டோமே என்றெல்லாம் வருந்துவீர்கள்.

**மிதுனம்**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. யாரையும் பரிந்துரை செய்ய வேண்டாம். பணம் வாங்கித் தருவதில் குறுக்கே நிற்காதீர்கள். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**கடகம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். உறவினர் நண்பர்களுடன் மனம் விட்டு பேசுவீர்கள். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும்.

**சிம்மம்**
உங்களுடைய ஆலோசனைகளை எல்லோரும் ஏற்கும்படி இருக்கும். திடீரென்று அறிமுகமாகும் நபரால் பயனடைவீர்கள். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

**கன்னி**
உங்கள் பிடிவாதப் போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் தன்னம்பிக்கை குறையும். உறவினர் நண்பர்களால் செலவினங் கள் அதிகரிக்கும். சிலரின் தவறான செயல்களை எண்ணி வருந்துவீர்கள்.

**விருச்சிகம்**
பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். மனதிற்குப் பிடித்த பொருளை வாங்கி மகிழ்வீர்கள். எதிர்பார்த்த வேலைகள் முடியும் நாள்.

**தனுசு**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். நாடி வந்தவர்களுக்கு உதவுவீர்கள். பழைய சிக்கலில் ஒன்று தீரும்.

**மகரம்**
குடும்பத்தில் உங்களின் நேரத்தை செலவழிப்பீர்கள். உங்களை சுற்றி உள்ளவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். நன்மை நடக்கும் நாள்.

**கும்பம்**
தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். புதுவேலை கிடைக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. வாகன வசதிப் பெருகும்.

**மீனம்**
குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். பூர்வீக சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். நினைத்ததை முடிக்கும் நாள்.

# மேலும் 19 இந்திய மீனவர்கள் விடுதலை

கொழும்பு, ஏப். 21

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட் டிருந்த 19 இந்திய மீனவர்கள், இரு நாடுகளுக்கும் இடையி லான தூதரக ரீதியிலான பேச் சுவார்த்தைகளை தொடர்ந்து நேற்றுத் திங்கட்கிழமை மாலை விடுவிக்கப்பட்டனர்.

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்ததாக கூறி இந்திய மீனவர்கள் அவ்வப்போது கைது செய்யப்படுவது தொடர்கதையாகி வருகிறது.

இந்த நிலையில், 2025 ஆம் ஆண்டு மொத்தம் 360 மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களில் 339 பேர் இதுவரை விடுவிக்கப்பட்டனர்.

இந்த ஆண்டு இதுவரை மொத்தம் 104 மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். இவர் களில் 30 பேர் ஏற்கனவே விடு விக்கப்பட்ட நிலையில், நேற்று மேலும் 19 பேர் விடுவிக்கப்பட்டனர்.

புதிய தூதரக பிரதிநிதிகளால்

# நற்சான்றிதழ் பத்திரங்கள் ஜனாதிபதியிடம் கையளிப்பு

கொழும்பு, ஏப். 21

இலங்கைக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள நான்கு தூதுவர்கள் மற்றும் இரண்டு உயர்ஸ்தானிகர்களின் நற்சான்றிதழ் பத்திரங்கள் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவிடம் கையளிக்கப்பட்டன.

நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து நற்சான்றிதழ் பத்திரங்கள் கையளிக்கப்பட்டன.

பப்புவா நியூ கினியாவின் உயர்ஸ்தானிகர், சோமாலியாவின் தூதுவர், லக்சம்பேர்க் தூதுவர், வத்திக்கானின் அப்போஸ்தலிக்க தூதுவர், பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர், குவைத் தூதுவர் ஆகியோர் தமது நற்சான்று பத்திரங்களை கையளித்தனர்.



இதனைத் தொடர்ந்து அவர்களுடன் ஜனாதிபதி சுமூகமான உரையாடலில் ஈடுபட்டதோடு வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமாநாயக்க ஆகியோரும் இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர். (எ)

வீட்டுக்கு தீ வைப்பு:

# சிகிச்சை பெற்றுவந்த முதியவர் உயிரிழப்பு!

கொழும்பு, ஏப். 21

மஹரகம பகுதியில் வீடொன்றுக்கு தீவைக்கப்பட்ட சம்பவத்தில் தீக்காயங்களுக்குள்ளான 03 பேர் உயிரிழந்தனர். மேலும், ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

மஹரகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பமுணுவ- மாவத்தையிலுள்ள இரண்டு மாடி வீடொன்று சனிக்கிழமை மாலை தீப்பற்றி எரிந்தது. வீட்டின் மேல் மாடியில் இருந்த தாயும் மகளும் உயிரிழந்த நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டனர்.

மேலும், உயிரிழந்த பெண்ணின் 46 வயதுடைய கணவன் மற்றும் வீட்டின் கீழ் மாடியில் வசித்து வந்த 76 வயதுடைய வீட்டின் உரிமையாளர் ஆகிய இருவர் பலத்த தீக்காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்த 76 வயதுடைய வீட்டின் உரிமையாளர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இரவு உயிரிழந்தார். எக்காரணத்துக்காக இந்தத் தீ வைப்பு மற்றும் கொலைகள் இடம்பெற்றன என்பது குறித்த உண்மையான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. உயிரிழந்த சிறுமியின் தந்தை தொடர்ந்தும் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

மஹரகம பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# சிறுப்பிட்டியில் திருமந்திர சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஏப். 21

சிறுப்பிட்டி மேற்கு அருள் மிகு சிறீ நாகதம்பிரான் ஆலயத்தில் சைவ வாழ்வியலில் திருமந்திரம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்தத் திருமந்திர சிறப்பு சொற்பொழிவுத் தொடர் 02 எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை

மாலை 04. 00 மணிக்கு நடைபெறவுள்ளது. திருமூல நாயனார் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வும், சைவப்புலவர் செ.த.ணகுமரன்- “சித்த புருஷர்களில் மூலவராகிய திருமூல நாயனார்”என்னும் தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

# மன்னார் - காங்கேசன்துறை வரையான கடல் பிராந்தியங்களில் மழை, காற்று

கொழும்பு, ஏப். 21

மன்னார் தொடக்கம் காங்கேசன்துறை, திருகோணமலை, பொத்துவில் ஊடாக அம்பாந்தோட்டை வரையான கரையோரத்துக்கு அப்பால் உள்ள கடல் பிராந்தியங்களின் சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 20 - 30 கிலோ மீற்றர் வேகத்தில் தென் மேற்குத் திசையில் இருந்து அல்லது மாறுபட்ட திசைகளில் இருந்து காற்று வீசும்.

நாட்டைச் சூழ உள்ள கடல் பிராந்தியங்கள் இடைக்கிடையே ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும்.

இதனால், இடியுடன் கூடிய மழை பெய்கின்ற சந்தர்ப்பங்களில் பலத்த காற்று வீசுவதுடன் அவ்வேளைகளில் கடல் பிராந்தியங்கள் தற்காலிகமாக மிகவும் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

6 கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியுடைய

# குஷ் ரக போதைப்பொருளுடன் இரு வெளிநாட்டவர்கள் கைது!

கொழும்பு, ஏப். 21
சுமார் 06 கோடி ரூபாய் பெறுமதியுடைய குஷ் ரக போதைப் பொருளுடன் இரண்டு வெளிநாட்டு பிரஜைகள் நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சோதனையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 05 கிலோ 401 கிராம் எடையுடைய போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது. இதன் சந்தைப் பெறுமதி சுமார் 06 கோடியே 40 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் இந்தோனேஷியாவைச் சேர்ந்த 22 வயது இளைஞனும் 30 வயது பெண்ணும் என தெரிய வந்துள்ளது.

சந்தேகநபர்கள் இருவரும் இந்த போதைப்பொருளை தாய்லாந்தின் பாங்கொக் நகரில் கொள்வனவு செய்து, அங்கிருந்து இந்தியாவின் பெங்களூரு நகருக்கு சென்று, பின்னர் அங்கிருந்து விமானம் மூலம் கட்டுநாயக்கவை வந்தடைந் தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ)

# மோ. போக்குவரத்து ஆணையர் கமல் அமரசிங்கவுக்கு பிணை

கொழும்பு, ஏப். 21
குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் கைது செய்யப்பட்ட மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் கமல் அமரசிங்க பிணையில் விடுவிக்கப்பட்டார்.

நேற்று முற்பகல் பிலஸ்ஸ நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத் தப்பட்டதையடுத்து, சந்தேகநபரை பிணையில் விடுவிக்க நீதிவான் உத்தரவிட்டார்.

இதற்கமைய 25, 000 ரூபாய் ரொக்கப் பிணையிலும், தலா 2 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளிலும் செல்ல அவருக்கு அனுமதி வழங்கப் பட்டது.

அத்துடன் அவருக்கு வெளிநாட்டு பயணத்தடை விதித்தும் நீதிவான் உத்தர விட்டார்.

வாகனம் ஒன்றை பதிவு செய்யும் போது இடம்பெற்ற தாக கூறப்படும் முறைகேடு தொடர்பில் கடந்த மார்ச் மாதம் 27ஆம் திகதி மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் கமல் அமரசிங்க குற்றப் புலனாய்வுத் திணைக் களத்தினரால் கைது செய்யப்பட்டிருந்தார். (எ)

# நாட்டின் பல பகுதிகளில் இடியுடன் கூடிய மழை

கொழும்பு, ஏப். 21
நாட்டின் பல பகுதிகளில் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மத்திய, சப்ரகமுவ, மேல், வடமத்திய மற்றும் தென் மாகாணங்களின் சில இடங்களிலும் குருநாகல் மாவட்டத்தின் சில இடங்களிலும் 75 மில்லி மீற்றர் வரை ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும்.

கண்டி, நுவரெலியா, மாத்தளை மற்றும் பதுளை மாவட்டங்கள் தவிர நாட்டின் ஏனைய பிராந்தியங்களில் அதிகரித்த வெப்பநிலை காணப்படும்.

பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் அவதானத்துடன் செயல்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (எ)

# மசகு எண்ணெய் விலை மீண்டும் அதிகரித்தது

கொழும்பு, ஏப். 21
உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை மீண்டும் அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

இதன்படி, ஒரு பீப்பாய் பிரெண்ட் வகை மசகு எண்ணெய் விலை 6.5 சதவீதத்தால் உயர்ந்ததுடன், இதன் புதிய விலை 95. 32 அமெரிக்க டொலர்களாக பதிவாகின என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

டபிள்யூ. டி. ஐ. வகை மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் புதிய விலை 90.15 அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளது.

ஈரான் மற்றும் அமெரிக்கா இடையிலான அமைதிப் பேச்சுவார்த்தைகள் நிச்சயமற்ற நிலையில் இருப்பதே, மசகு எண்ணெய் விலை மீண்டும் இவ்வாறு உயர்வடைவதற்கு காரணம் என்று சர்வதேச ஊடகங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (எ)

# மேல் மாகாணத்தில் பாரிய போதைப்பொருள் வேட்டை

குற்றத்தடுப்பு பிரிவினரால் இருவர் கைது

கொழும்பு, ஏப். 21
மேல் மாகாண வடக்கு குற்றத்தடுப்புப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட விசேட நடவடிக்கையின் போது, பெருமளவிலான போதைப்பொருட்களுடன் இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

மேல் மாகாண வடக்கு குற்றத்தடுப்புப் பிரிவில் தடுப்புக்காவலில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப் பட்ட சந்தேகநபர் ஒருவரிடம் பெறப்பட்ட தகவலுக்கமைய, ஞாயிற்றுக்கிழமை காலை இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, சந்தேகநபர்களிடமிருந்து 02 கிலோ 400 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள், 112 கிராம் ஹெரோயின், 08 கிராம் கொக்கெய்ன் மற்றும் போதைப்பொருள் கடத்தலுக்கு பயன்படுத்தப் பட்ட கார் ஒன்றும் கைப்பற்றப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் போதைப்பொருள் கடத்தல்காரர் ஒருவரும், அதற்கு உதவிய ஒருவருமாக இரண்டு பேர் கைது செய்யப்பட்டனர். சந்தேகநபர்கள் 31 மற்றும் 42 வயதுடையவர்கள் எனவும் பன்னிபிட்டிய மற்றும் ஹோமாகம பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் அடையாளம் காணப்பட்டனர். (எ)

# சுற்றுலாப் பயணிகள் வருகை எட்டு இலட்சத்தை தாண்டியது

கொழும்பு, ஏப். 21
இந்த ஆண்டின் இதுவரையிலான காலப்பகுதியில் எட்டு இலட்சத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, ஜனவரி முதலாம் திகதி முதல் ஏப்ரல் 15ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் மொத்தம் 8 இலட்சத்து 9,595 சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இவ்வாறு வருகை தந்தவர்களில் பெரும்பாலானோர் இந்திய பிரஜைகளாவர்.

அவர்களின் எண்ணிக்கை 167,095 ஆகும். இந்தியாவை தொடர்ந்து பிரித்தானியா, ரஷ்யா, ஜேர்மனி மற்றும் சீனா உள்ளிட்ட நாடுகளிலிருந்தும் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

இதேவேளை, ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் 15ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மாத்திரம் 68,961 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர்.

இருப்பினும், கடந்த மாதங்களுடன் ஒப்பிடுகையில் ஏப்ரல் மாதத்தில் தினசரி சுற்றுலாப் பயணிகளின் வருகை கணிசமான அளவில் வீழ்ச்சியடைந்துள்ளமை தரவுகளின் மூலம் அவதானிக்கப்பட்டுள்ளது என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது. (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அரசின் முறையற்ற நிர்வாகத்தால் பொருளாதாரம் பெரும் நெருக்கடியில்

### சுஜீவ சேனசிங்க எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 21

அரசாங்கத்தின் முறையற்ற நிர்வாகத்தால் மின்சக்தி துறை மற்றும் பொருளாதாரம் பாரிய நெருக்கடிக்குள் சிக்கியுள்ளது என்று பாராளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க எச்சரித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் பிரதான காரியாலயத்தில் நேற்றுத் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைந்துள்ள போதிலும், அமைச்சர்களுடைய வங்கிக் கணக்குகள் மட்டும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. கடந்த வரவு- செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியில் வெறும் 30 சதவீதத்தை மாத்திரமே அரசாங்கம் செலவிட்டுள்ளது. இது அரசாங்கத்தின் இயலாமையையே காட்டுகின்றது.

தற்போது நாட்டில் நிலவும் நிலக்கரி மோசடி காரணமாக எரிசக்தி துறையில் பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. தரமற்ற நிலக்கரியை பயன்படுத்துவதால் நுரைச்சோலை மின்நிலையத்தின் மின் உற்பத்தி திறன் குறைந்துள்ளது. உரிய நேரத்தில் நிலக்கரியை கொண்டுவரத் தவறியதால் இந்த ஆண்டு மின் உற்பத்தி 50 சதவீதத்தால் வீழ்ச்சியடையும்.

இதனால் மீதமுள்ள தேவையை நிவர்த்தி செய்ய அதிக செலவு மிக்க டீசல் மின் சாரத்தை நாட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. நீர் மின்சாரத்துக்கு ஓர் அலகுக்கு 3 ரூபாயும், நிலக்கரிக்கு 23 ரூபா யும் செலவாகும் நிலையில், டீசல் மூலம் மின்சாரம் தயா ரிக்க 80 ரூபாய் வரை செலவி டப்படுகிறது.

இவ்வாறான நஷ்டத்தின் பின்னணியிலும் டீசல் இறக்கு மதியில் பாரிய ஊழல்கள் இடம்பெறுகின்றன. உலகி லேயே டீசலுக்காக அதிக விலையை இலங்கை செலுத்துகிறது "- என்றார். (எ)

# புத்தாண்டில் சுற்றிவளைப்பு 1,289 பேருக்கு எதிராக வழக்கு

கொழும்பு, ஏப். 21

புத்தாண்டு பருவகாலத்தை முன்னிட்டு, நாடு முழுவதும் உள்ள 21,796 நிறுவனங்களில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சோதனைகளை மேற்கொண்டனர் என்று இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த ஏப்ரல் முதலாம் திகதி முதல் இந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதாகவும், இதில் 2, 300 பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பங்கெடுத்ததாகவும் அந்தச் சங்கத்தின் செயலாளர் சமில் முத்துகுட தெரிவித்தார்.

இந்தச் சோதனைகளின் போது 2,114 விசேட சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

அதிகாரிகளால் 4,308 உணவுப் பொருட்கள் பொறுப்பேற்கப்பட்டன.

அவற்றில் மனித நுகர்வுக்கு பொருத்தமில்லாத 3, 044 உணவுப் பொருட்களை அழிப்பதற்கு சுகாதார பரிசோதகர்கள் நடவடிக்கை எடுத்தனர்.

குறைபாடுகள் காணப்பட்ட 1,289 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது.

உணவு பாதுகாப்பை உறுதி செய்வதற்காக திட்டமிடப்பட்ட இந்த சோதனைகள் தற்போதும் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், புத்தாண்டு பருவ காலம் முடியும் வரை தொடர்ச்சியாக இந்தச் சோதனைகள் முன்னெடுக்கப்படும் என்று குறித்த சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (எ)

# சுற்றுலா படகு சேவையை முறைமைப்படுத்த திட்டம்

நுவரெலியா, ஏப். 21

நுவரெலியா கிரகரி வாவியின் சுற்றுலா படகு சேவையை முறைமைப்படுத்தி முன்னெடுத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்படும் என்று நுவரெலியா மாநகர சபை முதல்வர் உபாலி வனிகசேகர தெரிவித்தார்.

நேற்று முன்தினம் சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் சென்ற இரண்டு படகுகள் விபத்துக்குள்ளானதை அடுத்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

விபத்து குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நுவரெலியா கிரகரி வாவியில் சுமார் 120 சுற்றுலா படகுகள் உள்ளன.

நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தையடுத்து, படகு உரிமையாளர்கள் மற்றும் ஓட்டுநர்களை அழைத்து இது குறித்து அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

சுற்றுலாப் பயணிகளுக்கு கட்டாயம் பாதுகாப்பு அங்கிகள் வழங்கப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வேகக் கட்டுப்பாடுகளை கடைப்பிடிக்க வேண்டும் மற்றும் ஒழுக்கமான முறையில் படகுச் சவாரிகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர்களுக்கு தெளிவூட்டப்பட்டுள்ளது.- என்றார். (எ)

# திருமலையில் ஹோட்டலில் தீ விபத்து

திருகோணமலை, ஏப். 21

திருகோணமலை குச்சவெளி பிரதான வீதியின் நாவச்சோலை பிரதான வீதியில் அமைந்துள்ள தனியார் ஹோட்டல் ஒன்று ஞாயிற்றுக்கிழமை தீப்பற்றி எரிந்தது.

மின்சார ஒழுக்கு காரணமாக தீப்பற்றியிருக்கலாம் என்று ஆரம்ப கட்ட விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

தீயை பொது மக்கள் இணைந்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.(எ)

# கிரகரி வாவியில் படகு விபத்து இருவர் கைது

நுவரெலியா, ஏப். 21

நுவரெலியா கிரகரி வாவியில் ஞாயிற்றுக்கிழமை இரண்டு படகுகள் மோதியதில் ஒரு படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

கவிழ்ந்த படகில் இருந்த சுற்றுலாப் பயணிகள் அனைவரும் நீரில் விழுந்து தத்தளித்த நிலையில் நுவரெலியா பொலிஸ் உயிர்காப்புப் பிரிவினர் உயிராபத்து எதுவும் இன்றி பாதுகாக்க சிறுசிறு காயங்களுடன் மீட்டனர்.

மேலும், குறித்த இரு படகுகளை இயக்கிய ஓட்டுநர்களை பொலிஸார் கைது செய்தனர்.(எ)

# தம்புள்ளையில் ரயர் விற்பனை நிலையத்தில் திடீர் தீ விபத்து!

தம்புள்ளை, ஏப். 21

தம்புள்ளை - கண்டி வீதியில் அமைந்துள்ள ரயர் விற்பனை நிலையம் ஒன்றில் நேற்றுத் திங்கட்கிழமை அதி காலை தீ விபத்து ஏற்பட்டுள் ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். இதனால், பெருமளவிலான சொத்துக்கள் சேதமடைந்தன.

தம்புள்ளை பொலிஸாருக்கு கிடைத்த தகவலை தொடர்ந்து உடனடியாக செயல்பட்ட பொலிஸார், தம்புள்ளை தீயணைப்புப் பிரிவினரின் உதவியுடன் நீண்ட போராட் டத்துக்குப் பின்னர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்தத் தீ விபத்தின் போது எவருக்கும் உயிராபத்துக்கள் ஏற்படவில்லை என பொலிஸார் உறுதிப்படுத்தினர். இருப்பினும், கடையில் இருந்த பெருமளவிலான உபகரணங்கள் தீக்கிரையாகின.

தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என்பதுடன், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

### முழு நாடுமே ஒன்றாக திட்டம்:

# போதைப்பொருட்களுடன் ஒரே நாளில் 632 பேர் கைது!

கொழும்பு, ஏப். 21

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய, நாட்டில் போதைப் பொருளை தடுக்கும் நோக்கிலான "முழு நாடுமே ஒன்றாக" எனும் தேசிய திட்டத்தின் கீழ், ஞாயிற்றுக்கிழமை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் 632 பேர் போதைப்பொருட்களுடன் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

அத்துடன், தடுப்புக்காவல் உத்தரவு பெற்ற ஒருவரும் சட்டவிரோத சொத்துக்கள் தொடர்பான விசாரணைகளுக்கமைய 05 பேரும் கைது செய்யப்பட்டனர். இதேவேளை, 654 சோதனைகள் நடத்தப்பட்டதுடன், ஒருவர் புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பிவைக்க பரிந்துரைக்கப்பட்டார்.

குறித்த போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளின் போது சிக்கிய சந்தேக நபர்கள் வைத்திருந்த போதைப்பொருட்களையும் இதன்போது பொலிஸார் கைப்பற்றினர்.

இதற்கமைய, சந்தேகநபர்களிடமிருந்து 332 கிராம் ஹெரோயின், 473 கிராம் ஐஸ், 10 கிலோ 349 கிராம் கஞ்சா, 6,984 கஞ்சா செடிகள், 06 கிலோ 401 கிராம் குஷ் ரக போதைப்பொருள், 24 கிராம் ஹஷீஷ் ரக போதைப்பொருள், 592 போதை மாத்திரைகள், 112 கிராம் மதனமோதகம் மற்றும் 74 கிராம் மாவா போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# பள்ளத்தில் வீழ்ந்து ஓட்டோ விபத்து: தாய், இரண்டு மகள்கள் படுகாயம்



ஹற்றன், ஏப். 21

கொழும்பு - ஹற்றன் பிரதான வீதியின் வட்டவளை, கரொலினா பகுதியில் நேற்றுத் திங்கட்கிழமை காலை ஓட்டோ ஒன்று வீதியை விட்டு விலகி சுமார் 50 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் ஓட்டோவில் பயணித்த ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் படுகாயமடைந்த நிலையில் வட்டவளை பிரதேச மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

நீர்கொழும்பு பகுதியிலிருந்து ஹற்றனில் உள்ள உறவினர் ஒருவரின் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த போதே இந்த விபத்து நேர்ந்தது.

வளைவு ஒன்றில் எதிரே வந்த வாகனத்துக்கு இடமளிக்க முற்பட்ட போது, ஓட்டோ கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்தில் வீழ்ந்ததாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

விபத்தின் போது ஓட்டோவுக்குள் தாய், தந்தை மற்றும் இரு மகள்கள் இருந்தனர்.

இந்த விபத்தில் இரு மகள்களும் தாயாரும் காயமடைந்ததுடன், ஓட்டோவுக்கு பலத்த சேதம் ஏற்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பில் வட்டவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# நுவரெலியா சீதையம்மன் ஆலயத்தில் இந்திய துணை ஜனாதிபதி வழிபாடு

நுவரெலியா, ஏப். 21

இரண்டு நாள் உத்தியோக பூர்வ பயணத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்த இந்திய துணை ஜனாதிபதி சி.பி. இராதாகிருஷ்ணன் நேற்றுத் திங்கட் கிழமை நுவரெலியாவுக்கு சென்றார்.

அங்கு அவர் சீதையம்மன் ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டார். (எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## வலுசக்தி அமைச்சராக...

பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

வலுசக்தி அமைச்சுப் பதவிக்கு மேலதிகமாக, அவர் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சராகவும் கடமையாற்றுகிறார்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவும் இந்நிகழ்வில் பங்கேற்றார். (அ)

## இலங்கை தமிழர்கள்...

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட இந்தியத் துணை ஜனாதிபதி சி.பி. இராதாகிருஷ்ணன், நுவரெலியா - ராகலை பகுதியில் அமைந்துள்ள லிட்டஸ்டேல் பெருந்தோட்டத்துக்கு நேற்று விஜயம் செய்தார்.

அங்கு இந்திய வீடமைப்புத் திட்டத்தின் (கட்டம் 3) கீழ் இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் கட்டப்பட்ட வீடுகளைப் பார்வையிட்ட அவர், அந்தப் பயனாளிகளுடனும் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின்போது இந்திய வம்சாவளித் தமிழ் மக்களைச் சந்தித்ததில் தமக்கு மட்டற்ற மகிழ்ச்சி ஏற்படுவதாகத் துணை ஜனாதிபதி தெரிவித்தார்.

அத்துடன், இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் நலன் மற்றும் மேம்பாட்டுக்காக இந்திய அரசாங்கமும் இந்திய மக்களும் ஆழ்ந்த அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்திய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் இதுவரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலும், மலையகப் பகுதிகளிலும் உள்ள தமிழ் மக்களுக்காக 50,000 வீடுகள் வழங்கப்பட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

இதன் தொடர்ச்சியாக, நான்காம் கட்டத்தின் கீழ் மேலும் 10,000 வீடுகள் விரைவில் மக்களிடம் ஒப்படைக்கப்படும் என்றும் இந்தியத் துணை ஜனாதிபதி சி.பி.இராதாகிருஷ்ணன் உறுதியளித்தார். (அ)

## யாழில்.160 பரப்புக்...

விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த மோசடி சம்பவத்துடன் தொடர்புடைய புத்தளம் பகுதியை சேர்ந்த நபர் ஒருவர் அடையாளம் காணப்பட்ட நிலையில் அவரை கைது செய்வதற்கு கடந்த ஒரு வருட காலமாக பொலிஸார் முயற்சிகளை முன்னெடுத்து வந்தனர்.

இந்நிலையில் குறித்த நபர் நேற்று திங்கட்கிழமை கஸ்தூரியார் வீதி பகுதியில் நடமாடுவதாக பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் அவரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரை யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

## மதுவரித் திணைக்களத்...

61.95 பில்லியன் ரூபாய் வருமான இலக்கை விட இது 113.6 வீதம் அதிகமாகும்.

கடந்த 2025 ஆம் ஆண்டின் முதல் காலாண்டுடன் ஒப்பிடுகையில், இந்த வருமானம் 114.8 வீதவளர்ச்சியைக் காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தச் சாதனை வருமானம் குறித்து மதுவரி ஆணையாளர் நாயகம் எம். பி. என். ஏ. பேமரத்ன கருத்துத் தெரிவிக்கையில்-

மதுபான உற்பத்தி நிலையங்கள் மற்றும் வடிசாலைகளை தொடர்ந்து கண்காணித்தல், மதுபான போத்தல்களில் பாதுகாப்பு முத்திரைகளை இடுதல், சட்டவிரோத மதுபான உற்பத்திக்கு எதிரான சுற்றிவளைப்புகளை அதிகரித்தல் மற்றும் அனுமதிப்பத்திர இடங்களை முறையாக ஆய்வு செய்தல் போன்ற நடவடிக்கைகள் இந்த வருமான வளர்ச்சிக்குப் பங்களித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அரச வருவாயை ஈட்டும் நிறுவனங்களில் மூன்றாவது இடத்தில் உள்ள மதுவரித் திணைக்களம், 2026 ஆம் ஆண்டு நிறைவடைவதற்குள் 245 பில்லியன் ரூபாய் வருமான இலக்கை எட்டுவதற்குத் திட்டமிட்டுள்ளது.

புதிய அரசாங்கத்தின் வழிகாட்டல் மற்றும் அதிகாரிகளின் அர்ப்பணிப்புடன் இந்த இலக்கை எளிதில் அடைய முடியும் எனத் திணைக்களம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது. (அ)

## பொருளாதார ஆய்வ...

ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில், மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி பி. நந்தலால் வீரசிங்க குறித்த அறிக்கைகளை நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான ஜனாதிபதியிடம் வழங்கினார்.

2025ஆம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:-

பேரண்டப் பொருளாதார ஸ்திரத்தன்மை: கடந்த ஆண்டுகளில் முன்னெடுக்கப்பட்ட கொள்கை ரீதியான மற்றும் கட்டமைப்பு மறுசீரமைப்புகளின் பலனாக, 2025ஆம் ஆண்டில் இலங்கைப் பொருளாதாரம் அடைந்த முன்னேற்றம் மேலும் வலுப்பெற்றுள்ளது.

சவால்களை எதிர்கொள்ளும் திறன்: உலகளாவிய புவிசார் அரசியல் நெருக்கடிகள், வர்த்தக நிச்சயமற்ற தன்மைகள் மற்றும் 2025 பிற்பகுதியில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களுக்கு மத்தியிலும், உள்நாட்டுப் பொருளாதாரம் தனது தாங்கும் திறனை வெளிப்படுத்தியுள்ளது.

பொருளாதாரக் கொள்கைகளில் காணப்பட்ட ஸ்திரத்தன்மை காரணமாக முதலீட்டாளர்களின் நம்பிக்கை அதிகரித்துள்ளது. இது எதிர்கால அதிர்ச்சிகளை எதிர்கொள்வதற்கான சுய பாதுகாப்பைக் கட்டியெழுப்ப வழிவகுத்துள்ளது.

இந்நிகழ்வில் நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும மற்றும் மத்திய வங்கியின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

இலங்கையின் நிலைபேறான பொருளாதார வளர்ச்சியை நோக்கிய பயணத்தில் இந்த 2025ஆம் ஆண்டுக்கான ஆய்வு அறிக்கை ஒரு முக்கிய வழிகாட்டியாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

## மாகாண சபைத் தேர்தலை...

போது மாகாணசபைத் தேர்தல் முறைமையில் காணப்படும் சட்ட சிக்கல்கள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டு தீர்வு விடயங்கள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு குழுவில் பிரசன்னமாகியிருந்த சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

அதற்கமைய செவ்வாய்க்கிழமை (இன்று) செயற்குழுவுக்கு சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் எல்லை நிர்ணய ஆணைக்குழு முன்னிலையாகவிருந்த நிலையில் திகதி அறிவிக்காமல் குழு கூடல் பிற்போடப்பட்டுள்ளது.

இது மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் அரசாங்கம் கொண்டுள்ள அசமந்த போக்கினை வெளிப்படுத்துகிறது. செயற்குழுவின் நடவடிக்கைகளை மூன்று மாதத்துக்குள் நிறைவுப்படுத்த வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே தாமதப்படுத்தாதல் குழுவின் நடவடிக்கைகளை சிறந்த முறையில் முன்னெடுக்குமாறு அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறோம்-என்றார். (அ)

## பிள்ளையான் மீண்டும்...

அதற்கமைய, வெலிசறை கடற்படை தளத்திலுள்ள சிறைக்கூடத்துக்கு அவர் அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் ஏ.சி.கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், கைதி ஒருவருக்கு வழங்க வேண்டிய அனைத்து வசதிகளும், பிள்ளையானுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

ஏதேனும் விசேட தேவைகள் ஏற்படும் பட்சத்தில் அதனை உரிய முறையில் சிறைச்சாலைகள் அத்தியட்சகருக்கு அறிவிக்க வேண்டும்

கிடைக்கும் கோரிக்கைகளை சட்டரீதியாக அணுகி, இயலுமான விடயங்கள் செய்து கொடுக்கப்படும் என சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் ஏ.சி.கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

முன்னதாக, கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் ரவிந்திரநாத் சுப்ரமணியம் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டமை தொடர்பில் பிள்ளையான் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து நீதிமன்ற உத்தரவுக்கு அமைய, தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 21 மாவட்டங்களுக்கு வெப்ப எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 21

இலங்கையின் பெரும்பாலான பகுதிகளில் நிலவும் வெப்பமான வானிலை காரணமாக, இன்று மனித உடலால் உணரப்படும் வெப்பச் சுட்டெண் "அவதானம்" செலுத்த வேண்டிய மட்டத்திற்கு அதிகரிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வடக்கு, வடமத்திய, வடமேல், மேல், சபரகமுவ, தெற்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உள்ளிட்டவற்றுடன் மொனராகலை மாவட்டத்திலுள்ள உள்ள சில இடங்களில் வெப்பம் கணிசமாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வெப்பச் சுட்டெண் "அவதானம்" மட்டத்தில் இருக்கும் போது நீண்ட நேரம் வெயிலில் இருப்பதன் மூலம் உடல் சோர்வு ஏற்படலாம், தொடர்ந்து கடினமான பணிகளில் ஈடுபடுபவர்களுக்கு வெப்பத்தினால் ஏற்படும் தசைப்பிடிப்புகள் ஏற்படக்கூடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தாகம் ஏற்படாவிட்டாலும் போதுமான அளவு தண்ணீர் குடிக்கவும், முடிந்தவரை வெளியில் செல்வதைத் தவிர்த்து, நிழலான இடங்களில் தங்கவும், வயது முதிர்ந்தவர்கள் மற்றும் சிறுவர்கள் குறித்து விசேட அவதானம் செலுத்தவும், மென்மையான, வெளிர் நிற ஆடைகளை அணியவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

## உயிர்த்த ஞாயிறு...

அமுல்படுத்தப்படவுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

இன்று அதிகாலை முதல் நினைவேந்தல் நிகழ்வுகள் நிறைவடையும் வரை இந்த போக்குவரத்து மாற்றங்கள் அமுலில் இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், நினைவேந்தல் நிகழ்வுகளை முன்னிட்டு தேவாலயத்தைச் சூழ பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (அ)

## பெந்தோட்டை கடலில்...

பல்கலைக்கழக மாணவர்களுடன் பெந்தோட்டை கடலில் நீராடுவதற்காகச் சென்றிருந்த போதே இந்த அனர்த்தத்திற்கு முகங்கொடுத்துள்ளதாக தெரியவருகிறது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பெந்தோட்டை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## அதிகளவு கட்டணத்தி...

பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அக்கட்சியின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொதுவாக ஒரு பீப்பாய்க்கு 3 முதல் 4 டொலர் வரை இருக்க வேண்டிய பிரீமியம் கட்டணம்இ இங்கு மிக அதிகமாக காணப்படுகிறது. டீசல் இறக்குமதிக்காக டிராபிகுரா நிறுவனத்துடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி பிரீமியம் கட்டணம் 3.8 டொலராக இருந்தது. ஆனால், ஒரு கட்டத்தில் அவசர நிலையைக் காரணங்காட்டி அந்த நிறுவனம் எரிபொருள் விநியோகத்தை நிறுத்தியது. பின்னர் அதே நிறுவனத்திடம் இருந்து அவசர கொள்வனவு என்ற அடிப்படையில் மீண்டும் டீசல் பெறப்பட்டது. அப்போது 3.8 டொலராக இருந்த பிரீமியம் கட்டணம், ஒரே அடியாக 48 டொலர் உயர்த்தப்பட்டது. இதன் மூலம் ஒரு பீப்பாய்க்கு சுமார் 44.2 டொலர் மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ளது.

இந்த முறையற்ற கொடுக்கல் வாங்கல் காரணமாக அரசாங்கத்திற்கு சுமார் 11 மில்லியன் டொலர் அதாவது சுமார் 350 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. எரிசக்தி தெரிவுக்குழுவின் ஊடாக, தற்போதைய எரிபொருள் இறக்குமதி நடைமுறைகள் குறித்து கணக்காய்வாளர் நாயகத்தின் விசேட விசாரணை அறிக்கையை கோருகிறோம்-என்றார். (அ)

## இந்த வருடம் மீண்டும்...

காரணமாக, பொதுமக்களிடையே புத்தாண்டு தொடர்பான உற்சாகமோ அல்லது உண்மையான புத்தாண்டு உணர்வோ காணப்படவில்லை.

மக்கள் கடும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே இம்முறை புத்தாண்டை கொண்டாடினர்.

இம்முறை மே தினம் பௌத்தர்களின் புனித நாளான வைகாசி பௌர்ணமி தினத்தில் வருவதால், அரசியல் ரீதியிலான மே தின ஊர்வலங்கள் அல்லது கூட்டங்களை நடத்தப் போவதில்லை.

மே தினத்திற்குப் பதிலாக அன்றைய தினம் சமய வழிபாடுகள் மற்றும் "பிங்கம் எனப்படும் பௌத்த புண்ணிய காரியங்கள்" உள்ளிட்ட ஆன்மீக நிகழ்வுகளில் ஈடுபடத் தீர்மானித்துள்ளோம்-என்றார்.

புதிய ஆண்டில் அரசியல் ரீதியான மாற்றங்கள் ஏற்படுமா? என்ற கேள்விக்கு பதிலளித்த அவர், நிச்சயமாக மாற்றங்கள் ஏற்படும்.

அத்துடன், மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான ஒரு பெரிய அளவிலான திட்டத்தை தமது கட்சி வைத்துள்ளது.

வரவிருக்கும் அரசியல் சவால்கள் மற்றும் மாற்றங்களுக்கு முகங்கொடுப்பதற்காக தமது கட்சி முழுமையாகத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

## இலங்கை விஜயத்தை நிறைவு செய்து இந்தியா திரும்பிய துணை ஜனாதிபதி



கொழும்பு, ஏப். 21

இலங்கைக்கு மேற்கொண்டிருந்த தனது உத்தியோக பூர்வ விஜயத்தை வெற்றிகரமாக நிறைவு செய்த இந்தியத் துணை ஜனாதிபதி சி.பி. இராதாகிருஷ்ணன் நேற்று செவ்வாய்க்கிழமை கொழும்பிலிருந்து இந்தியா புறப்பட்டார்.

இரண்டு நாள் விஜயத்தின்போது, அவர் இலங்கை அரசின் உயர்மட்டத் தலைவர்களுடன் முக்கிய சந்திப்புகளை மேற்கொண்டதுடன், இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்தும் பல்வேறு அம்சங்கள் தொடர்பாக கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

அதன் ஒரு பகுதியாக, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய, மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோருடன் தனித்தனியான சந்திப்புகள் இடம்பெற்றன.

வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களுடனும், மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் அமைப்புகளுடனும் அவர் கலந்துரையாடல்கள் நடத்தியது குறிப்பிடத்தக்கது.

இந்த விஜயத்தின்போது, மலையகத்தில் உள்ள இந்திய வம்சாவளியினரையும் சந்தித்து உரையாற்றிய அவர், மத மற்றும் கலாசார நிகழ்வுகளிலும் பங்கேற்றார். (அ)

## யாழ்.பல்கலையில் அன்னை பூபதியின் 38 ஆம் ஆண்டு நினைவு நினைவேந்தல்




யாழ்ப்பாணம், ஏப். 21

தியாகத்தாய் அன்னை பூபதியின் 38ஆம் ஆண்டு நினைவு நினைவேந்தல் நிகழ்வுகள் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நடைபெற்றன.

பல்கலைக்கழக வளாகத்தினுள் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் , ஈகச்சுடர் ஏற்றப்பட்டதை தொடர்ந்து, மாணவர்கள் அன்னை பூபதியின் திருவுருவ படத்திற்கு மலர்தூவி, சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர். (அ)

### மக்களுக்கான சுகாதார சேவையை உருவாக்க

# உலக சுகாதார அமைப்போடு கைகோர்க்கின்றது இலங்கை!



கொழும்பு, ஏப். 21

நாட்டின் சுகாதார அமைப்பின் முன்னேற்ற ஆய்வை நடத்துவதற்காக வந்த உலக சுகாதார அமைப்பின் சர்வதேச நிபுணர் குழுவுக்கும், சுகாதார மற்றும் மக்கள் ஊடகத் துறை அமைச்சருக்கும் இடையே நடைபெற்ற கலந்துரையாடயாடலின்போது வழங்கப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில், நாட்டின் சுகாதார சேவை வலையமைப்பை ஒரு வினைத்திறனான மற்றும் மக்கள் சார்ந்த அமைப்பாக மாற்றுவதே இதன் நோக்கம் என்று சுகாதார மற்றும் மக்கள் ஊடகத் துறை அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கையின் சுகாதார அமைப்பின் முன்னேற்றத்தை ஆய்வு செய்வதற்கும், அதனை மேலும் வலுப்படுத்துவதற்கான பரிந்துரைகளை வழங்குவதற்கும் இலங்கைக்கு வருகை தந்த உலக சுகாதார அமைப்பின் சர்வதேச நிபுணர் குழு, நேற்று சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸவை சந்தித்து, நாட்டின் சுகாதார அமைப்பின் தற்போதைய செயல்பாடு மற்றும் இலங்கையில் முதன்மை சுகாதார அமைப்பை வலுப்படுத்த அரசாங்கத்தால் செயல்படுத்தப்படும் "ஆரோக்கிய சுகாதார மற்றும் நல்வாழ்வு மையங்கள்" திட்டத்தின் முன்னேற்றம் குறித்து விரிவாக கலந்துரையாடியது.

சுகாதாரம் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜெயதிஸ்ஸ வேண்டுகோளின் பேரில் இந்த நிபுணர் குழு இலங்கைக்கு வருகை தந்து இருந்தது. நேற்று முதல் 24 ஆம் திகதி வரை தங்கி, தங்களது ஆய்வுகளை மேற்கொள்ளவிருக்கும் நிபுணர் குழுவுடன், சுகாதாரம் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலில் உலக சுகாதார அமைப்பின் இலங்கை நாட்டுக்கான பிரதிநிதி வைத்தியர் ராஜேஷ் சம்பாஜி ராவ் பாண்டவ் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில், சுகாதாரம் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜெயதிஸ்ஸ அவர்கள், ஆயிரம் (1000) "சுகாதார மற்றும் நல்வாழ்வு மையங்களை" நிறுவுவதற்கான திட்டம், ஆரம்ப சுகாதார சேவைகளை கணினி மயமாக்கல் திட்டம் மற்றும் அத்திட்டத்தின் வெற்றி மற்றும் சவால்கள் குறித்து தூதுக்குழுவினருக்கு விளக்கினார். (அ)

## மே தின எழுச்சி ஆர்ப்பாட்டங்களை தையிட்டி பகுதியில் நடத்தவேண்டும்

**காணி உரிமைக்கான மக்கள் இயக்கத்தின் தலைவர் தெரிவிப்பு**

யாழ்ப்பாணம், ஏப். 21

மே முதலாம் திகதி அன்று தமிழ்த் தேசியக் கட்சிகள், பொது அமைப்புகள் தாங்கள் மேற்கொள்ளும் வழமையான மே தின எழுச்சிக் கூட்டங்கள், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை தையிட்டியில் நடத்துமாறு காணி உரிமைக்கான மக்கள் இயக்கத்தின் தலைவர் இரத்தினசிங்கம் முரளிதரன் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி கிழக்கில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்வரும் மே முதலாம் திகதி தொழிலாளர் தினமாகவும், சித்திரை பௌர்ணமியாகவும், மற்றும் சிங்கள மக்களுடைய பௌர்ணமி தினமும் இடம் பெறுகின்ற ஒரு முக்கிய நாளாகும். அன்றைய நாளிலே வடக்கு- கிழக்கு தழுவிய தமிழ் தேசிய கட்சிகள் சமூக செயற்பாட்டாளர்கள், பொது அமைப்புகள், வழமையாக மே ஒன்று அன்று நடத்துகின்ற எழுச்சி போராட்டங்கள், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை தையிட்டி விகாரைக்கு எதிராக மேற்கொண்டு பாரிய எதிர்ப்பாக வெளிக் கொண்டு வரவேண்டும்-என்றார். (அ)

## ஜேர்மன் தூதுவருடன் மனோ குழு சந்திப்பு!




கொழும்பு, ஏப். 21

மலையக தமிழரின் வீடு, வாழ்வாதார காணிக்கான உரிமை, பெருந்தோட்ட முறை மாற்றம் மூலம் தொழிலாளர், பங்காளராக மாறுவது, ஐரோப்பிய ஒன்றிய ஜி. எஸ்.பி பிளஸ், மனித உரிமை விதிகள், தோட்டங்களில் நிலவும் நவீன அடிமைத்துவம், ஒதுக்கல், தொடர்பாக ஜேர்மன் தரப்புக்கு எடுத்து கூறியதாக மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

ஜேர்மன் தூதுவர் கலாநிதி பீலிக்ஸ் நியுமனை, தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவர் மனோ கணேசன் தலைமையிலான குழுவினர் சந்தித்து உரையாடினர்.

இந்த உரையாடலில், தமிழ் முற்போக்குக் கூட்டணி அரசியல் குழு உறுப்பினர்கள் எஸ். சசிகுமார், பரத் அருள்சாமி, எஸ். பிரஜீவன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இது தொடர்பில் மனோ கணேசன் தனது எக்ஸ் தளத்தில் மேலும் கூறியுள்ளதாவது-

மலையக தமிழர், என்பவர்கள் சமீபத்தைய இந்திய வம்சாவளி பின்னணியுடைய 1.5 மில்லியன் தேசிய சிறுபான்மை இனத்தவர் ஆகும்.

இவர்களை, ஒரு தொழிலாளர் பிரிவாக மட்டும் காட்ட கயமை முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

உலகம், இந்த இன அடையாளத்தை கவனத்தில் கொள்ள வேண்டும்.

உலக உதவிகள், மிகவும் நலிந்த பிரிவினரை அடைகிறதா என உறுதி செய்யப்படவேண்டும்.

ஜேர்மனியில் சிதறி வாழும் சிறுபான்மை சமூகங்களான டேன்ஸ், சோர்ப்ஸ், பிரீசியன், சிநிதி-ரோமானியர், ஆகியோர் அனுபவிக்கும் நலவுரிமைகள் பற்றி அறிய விரும்புகிறோம்.

அதன் மூலம், எமது அரசியலமைப்பு யோசனையான நில-சார்பற்ற சமூக சபை முன்மொழிவை மேலும் சிறப்பிக்க விரும்புகிறோம்.

ஜேர்மன் தூதுவர் மலையக மக்களின் காணி உரிமை தொடர்பில் தாம் தெளிவு கொண்டுள்ளதாகவும், அதை தற்போது மென்மேலும் விரிவுபடுத்திக் கொண்டதாகவும், தொடர்ந்து நமக்குள்ளே உரையாடலை தொடர விரும்புவதாகவும் தெரிவித்தார்-என குறிப்பிட்டுள்ளார்.

# கட்டுமானத்துறையில் நிலவும் வெற்றிடங்கள் 10,000 இளைஞர்களுக்கு பயிற்சி வழங்க முடிவு

கொழும்பு, ஏப். 21

கட்டுமானத் துறையில் ஏற்பட்டுள்ள பாரிய தொழிலாளர் பற்றாக்குறைக்குத் தீர்வாக, இலங்கை இராணுவத்தின் கீழ் 10,000 கட்டுமானப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் நீர்வழங்கல் அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பிரதி அமைச்சர் டி.பி. சரத் கருத்து தெரிவிக்கையில், கட்டுமான நிறுவனங்களுடன் தற்பொழுது ஆலோசனைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், "கட்டுமானப் பணியாளர்" என்ற பதவியை ஒரு அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகபூர்வ தொழில் வகையாக தரப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

தற்பொழுது இத்துறையில் சுமார் 7,500 வெற்றிடங்கள் காணப்படுகின்றன. ஆரம்பத்தில் வெளிநாட்டுப் பணியாளர்களைக் கொண்டுவரத் திட்டமிடப்பட்ட போதிலும், தற்போது உள்நாட்டு இளைஞர்களைக் கொண்டே அந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இத்திட்டம் முக்கியமாக உயர்தரப் பரீட்சையை முடித்துவிட்டு மேலதிகத் திட்டங்கள் இன்றி வீட்டில் இருக்கும் இளைஞர்களை இலக்கு வைத்துள்ளது.

தகுதியானவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான விழிப்புணர்வுத் திட்டங்கள் மற்றும் நேர்முகத் தேர்வுகள் தற்பொழுது நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கட்டுமானத் துறையில் இளைஞர்கள் இணைவதற்குத் தயங்குவதற்கான முக்கிய காரணம் அத்துறையில் காணப்படும் நிலையற்ற வேலை வாய்ப்பு என பிரதி அமைச்சர் சுட்டிக்காட்டினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.04.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.